**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**EA No. 01/2023 in EP No. 53/2010 in ARC No.15/2008**

**22.07.2025 ம.சா.1 சந்திரசேகரன் த.பெ. கல்யாணராமன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் SSLC படித்துள்ளேன். நான் விவசாயம் செய்கிறேன். எனது சொந்தஊர் மயிலாடுதுறை. மனு சொத்து திருவண்ணாமலையில் உள்ளது . நான் பிராமண சமூகத்தை சேர்ந்தவர் . இந்த மனுவுக்கு 1ம்எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபனையை நான் படித்து பார்த்தேன் . மனு சொத்து ஆதியில் ராஜாமணி ஐயர் என்பவருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரிதான் . ராஜாமணி ஐயர் ஆதியில் மயிலாடுதுறையை சேர்ந்தவர் என்றால் அதை பற்றி தெரியாது . எனக்கு அவர் மயிலாடுதுறையை சேர்ந்த என் உறவினர் என்று நன்கு தெரிந்துகொண்டு தற்போது பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல . மனு சொத்து 29.03.1984 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் சந்திரசேகரன் என்பவரின் பாகத்திற்கு B சொத்தில் ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த B அட்டவணை சொத்தில் 2 சொத்துக்கள் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது . அந்த இரண்டு சொத்துக்கள் சம்மந்தமாகவும் 1ம் எதிர்மனுதாரர் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது . மனு சொத்து திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் இருந்து 1000 அடி தூரத்தில் சன்னதி தெருவில் உள்ளது என்றால் சரிதான். அதன் முழு பகுதியிலும் வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 19.06.2006 ல் 1ம் எதிர்மனுதாரரிடம் ராஜேஷ் என்பவர் கடன் பெற்றுள்ளார் என்றால் எனக்கு அதை பற்றி எனக்கு தெரியாது . மேற்படி கடனுக்கு ராஜேஷின் தகப்பனார் சந்திரசேகரன் என்பவர் பொறுப்புறுதி ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது . அந்த கடனை வாங்கும்போது 29.03.1984 தேதியிட்ட பாகப்பத்திரத்தின் புகைப்பட நகல் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது . ராஜேஷ் கடனை செலுத்தாத காரணத்தால் 1ம் எதிர்மனுதாரர் நிறுவனம் ராஜேஷ் மற்றும் சந்திரசேகர் ஆகியோர்மீது ARC .15/2008 என்ற ஆர்பிர்ட்ரேஷன் வழக்கு தொடர்ந்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது . அந்த வழக்கு தொடர்ந்த பின்பு நானும் அவ்வழக்கின் எதிர்மனுதாரர்களும் 1ம் எதிர்மனுதாரரிடம் சென்று சமாதானம் பேசினோம் என்றால் சரியல்ல . அதனால் இந்தவழக்கு சம்மந்தப்பட்ட அனைத்து விவரங்களும் எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரியல்ல . 07.08.2009

அன்று தீர்ப்பு வழங்கப்பட்டு அதன் நகல் அவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு அனுப்பட்டது என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது . அதை பற்றி எனக்கு நன்கு தெரிந்துகொண்டு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல . மேற்படி உத்தரவை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கபோகிறார்கள் என்று தெரிந்துகொண்டு என்னுடைய அறிவுறையின் பேரில் சந்திரசேகரன் , அவர் மனைவி சரோஜா பெயரில் தான செட்டில்மெண்ட் 17.03.2010 அன்று ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் கிரையம் பெறும்பொழுது பார்த்தேன். அதில் சொத்தின் மதிப்பு ரூ . 40 லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை . அதன்பின்னர் சந்திரசேகரன், சரோஜா மற்றும் ராஜேஷ் சேர்ந்து மார்ஷல் ஆரோக்கியராஜ் என்பவருக்கு என்னுடைய அறிவுரையின்பேரில் அதிகாரப்பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அந்த அதிகாரப்பத்திரத்தில் மேற்படி மூவரும் அதில்கண்ட சொத்தை பராமரிக்க முடியாததால் அதிகார முகவரை நியமிப்பதாக வாசகங்கள் உள்ளது என்றால் நான் அதை பார்க்கவில்லை. அதிகார முகவர்கள் 01.04.2011 ல் ஜெயசுதா என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான் . அதில் கிரைய மதிப்பு ரூ. 24 ,23,000/- என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான் . மேற்படி ஜெயசுதா மனு சொத்து அருகேயுள்ள ஒரு டெய்லரின் மனைவி என்றால் எனக்கு தெரியாது . இன்றைய தேதியிலும் ஜெயசுதாவின் கணவர் அந்த இடத்தில் ஒரு டெய்லர் கடை நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது . மேற்படி ஜெயசுதாவிற்கு சொத்தை வாங்கும் அளவிற்கு வசதி இல்லை என்றும் , என்னுடைய அறிவுரையின்பேரில்தான் அந்த கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. . அந்த ஆவணத்தில் மனு சொத்துக்கான அனைத்து மூல ஆவணங்களும் ஜெயசுதாவிடம் ஒப்படைக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான் . 27.02.2013 அன்று நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் சொத்து மதிப்பு ரூ . 46,28,800/- ஆக உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற காலத்திலேயே மனு சொத்தின் மதிப்பு ரூ . 2 கோடிக்கு மேல் என்றால் சரியல்ல . இந்த ஆவணங்கள் அனைத்தும் என்னுடைய அறிவுரையின்பேரில் குறைவான மதிப்பீடு செய்து ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. இன்றைய தேதியிலும் மனு சொத்தில் ராஜேஷ் மற்றும் அவருடைய குடும்பத்தினரின் சுவாதினத்தில் உள்ளது என்றால் சரியல்ல . மனு சொத்தை வாங்கும் அளவிற்கு எனக்கு வசதியில்லை என்று சொன்னால் சரியல்ல . ARC வழக்கு முடிவடைந்த நிலையில் நானும் மற்றவர்களும் சேர்ந்து பல ஆவணங்களை

ஏற்படுத்தி நிறைவேற்று மனுவை தடை செய்கிறோம் என்றால் சரியல்ல . நான் நல்லெண்ணத்தின் அடிப்படையில் சொத்தை கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. சொத்து மூதாதையர் சொத்து என்பதால் சந்திரசேகர் அதை தனிப்பட்ட முறையில் தான செட்டில்மெண்ட் செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல . மனு சொத்து சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் நான்வைத்துள்ளேன் என்றும், அது தொலைந்துவிட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல . கடனை ஏமாற்றுவதற்காக தீர்ப்பு கடனாளிகளுடன் சேர்ந்து இந்த மனுவை நான் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல . ARC மனு நிலுவையில் இருந்தபோதே நான் மனு சொத்தை கிரையம் பெற்றதால் இந்த மனுவை தாக்கல் செய்ய எனக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல . மனு சொத்தில் நான் எப்பொழும் சுவாதினத்தில் இல்லை என்றும் , நான் தாக்கல்செய்துள்ள வரி ரசீதுகள் மனுக்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல . மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல .

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.